## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.
## O.S. No.150/2018

2024ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 06 – ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி. A. சீதாலெட்சுமி, M.A.,B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் கூறப்பட்டு உறுதிகூறப்படுகிறது.

**நாள் 06.09.2024**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பரமேஸ்வரி | ஜாதி | : |
| க /பெயர் | : புலவேந்திரன் | மதம் | : |
| கிராமம் | : | தொழில் | : |
| வட்டம் | : | வயது | : |

வா.சா.1 முன்னிலை சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை

**1.** சர்வே எண்.457/5, 6 மற்றும் 7 ஆகிய புல எண்களில் அரசு வாய்க்கால் உள்ளதா என்றால் உள்ளது. அந்த அரசு வாய்க்காலானது எத்தனை அடி நீளம் எத்தனை அடி அகலம் என்றால் சரியாக நினைவில்லை. எனக்கு சொந்தமான சொத்துக்களுக்கு அருகில் 3 அரசு வாய்க்கால் உள்ளது. சர்வே எண்.457/9 மற்றும் 10ல் புல வரைபடத்தை அரசு வாய்க்கால் இருக்கிறதா இல்லை என்பது குறித்த தெரியவரும் என்றால் சரிதான்.

2. நான் தாவா சொத்துக்களை வாங்குவதற்கு முன்பாக பட்டா, சிட்டா, புலவரைபடம் ஆகியவற்றை பார்த்துதான் வாங்கினேன் என்றால் சரிதான். புலவரைபடத்தில் வாய்க்கால் என குறியீடு செய்யப்பட்டுள்ள பகுதியை நான் கிரையம் வாங்கவில்லை என்றால் சரிதான். புல வரைபடத்தில் வாய்க்கால் என குறிப்பிடப்பட்டுள்ள பகுதியை வாய்க்காலாக பயன்படுத்துவதில் எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் உள்ளது. ஏனென்றால் அது எனக்கு சொந்தமான இடம் ஆகும்.

3. புல எண்.457/9 மற்றும் 457/10 ஆகியவற்றில் வாய்க்கால் உள்ளதா புல வரைபடத்தில் உள்ளதா என்றால் இல்லை. எனக்கு பக்கத்திலுள்ள நிலத்தை யார் வாங்கியுள்ளார்கள் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. ஏதற்காக பிரதிவாதியை இவ்வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் எனது சொத்தை ஆக்கிரமிக்க முயற்சி

செய்வதால் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எப்போது முதன் முறையாக பிரதிவாதிகள் ஆக்கிரமித்து முயற்சி செய்தார்கள் என்றால் கடந்த 2018 ஆம் வருடம் ஆகும். பிரதிவாதிகள் தாவா சொத்தை ஆக்கிரமித்து வாய்க்காலாக கடந்த 2018 ல் பயன்படுத்தி வந்தார்கள். அவ்வாறு பயன்படுத்தக்கூடாது என்று சொல்லிதான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

4. பிரதிவாதிகள் எனக்கு சொந்தமான தாவா சொத்தை வாய்க்காலாக பயன்படுத்தக்கூடாது என்று சொல்லி 2 முறை காவல் துறையில் புகார் கொடுத்துள்ளேன். 2 முறை புகார் கொடுத்தபோது பிரதிவாதிகள் காவல் நிலையம் வந்து அவ்வாறு தான் பயன்படுத்துவோம் என்று சொல்லியதால் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த பிரச்சனை தொடர்பாக ஊரில் பஞ்சாயத்து பேசினோமா என்றால் பேசினோம். நேரிடையாக பிரதிவாதிகளிடம் சொன்னோம்.

5. பிரதிவாதிகள் தொடர்ந்து எனக்கு சொந்தமான தாவா சொத்திலுள்ள வாய்க்கால் மூலமாக தண்ணீர் பாய்ச்சியதால் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதிகள் எனக்கு சொந்தமான இடத்திலுள்ள வாய்க்காலை பயன்படுத்துவதால் தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த இடத்தில் வாய்க்கால் கிடையாது. எனக்கு சொந்தமான சொத்தில் வாய்க்காலில் பாய்ச்ச கூடாது என்றும், அரசுக்கு சொந்தமான வாய்க்காலிருந்து தண்ணீர் பாய்ச்சி கொள்ளும்படி சொன்னேன் என்றால் சரிதான்.

6. தாவா சொத்திற்கு வடக்கில் சர்க்கார் வாய்க்கால் உள்ளது. தெற்கில் அரசுக்கு சொந்தமான வாய்க்கால். மேற்கில் அரசுக்கு சொந்தமான வாய்க்கால் உள்ளது. தற்போது பிரதிவாதி ராஜகோபாலுக்கு சொந்தமான சொத்து உள்ளது.

(வழக்கறிஞர் வேண்டுக்கோளிற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
DN: cn=A SEETHALAKSHMI, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2024.09.18 12:34:26 +0530

District Munsif

Mannargudi.